Registered as a Newspaper in Ceylon விலை சதம் 10

# ஈழநாடு

மலர் 7 EELA NADU இதழ் 153

National Tamil Daily தேசிய தினசரி

(14-7-65)

விசுவாவசு ஆனி 30 சபி அவ் பிறை 14 புதன்கிழமை

26-வது ஆண்டு விழாவை முன்னிட்டு
அரைச்சலார்
28-6-65 முதல்
கொழும்பு ஸ்ருடியோ
யாழ்ப்பாணம்

## 32½ கோடி மைலில் செலுத்தும் ராக்கெட்

சென்னை, ஜூலை 13

"மெரினர் 4" என்ற அமெரிக்க ... இதுவரை 32 60 00 000 மைல் தூரம் பிரயாணம் செய்திருக்கிறதென்றும், செவ்வாய்க் கிரகத்துக்கு இன்னும் 8 லட்சம் மைல் தூரமே இருப்பதாயும் அறிவிக்கப்பட்டது. செவ்வாயிலிருந்து 7000 மைல் தூரம் வந்ததும் அது புகைப்படங்களைப் பிடிக்க ஆரம்பிக்கும். அங்கிருந்து பூமிக்கு படங்கள் வந்து சேர 10 தினங்கள் பிடிக்கும்.

# 162 சீன ரயில் பெட்டிகளை இலங்கை வாங்கும்

## ரூ. 63 லட்சம் பெறுமதியான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது

கொழும்பு, செவ்வாய்

**இலங்கை ரயில்வேக்கு ரூ. 62,70,000 பெறுமதியான 162 பிரயாணிகள் பெட்டிகளையும், சாமான் வண்டிகளையும் வழங்கும் ஒப்பந்தம் ஒன்றில் இன்று சீன இலங்கைப் பிரதிநிதிகள் கைச்சாத்திட்டனர்.**

சீன ஏற்றுமதி, இறக்குமதி ஸ்தாபனத்தின் அதிகாரியும், இலங்கையைச் சேர்ந்த ... தலைவரும் இருநாடுகளின் சார்பில் ஒப்பமிட்டனர்.

சென்ற ஆண்டு சீனா இலங்கைக்கு வழங்கிய ரூ 2 கோடி கடனிலிருந்து இதற்கான பணம் கழித்துக் கொள்ளப்படும். இந்தக் கடன் 10 ஆண்டுகளில் சீனாவுக்கு திருப்பிச் செலுத்தப்பட வேண்டும்.

சீனா இப்போது அளிக்கும் உதவி 8-வது தவணைக்குரியதாகும். ஏற்கனவே அது ... லட்சம் ரூபாய் பெறுமதியான ரயில்பெட்டிகளை இலங்கைக்கு வழங்கியிருக்கிறது.

## கட்டாய அயல்நாட்டு மொழி போதனை

ஜெனிவா, ஜூலை 13

பொதுக் கல்வி சம்பந்தமான 18-வது சர்வதேச மகாநாடு ஜெனிவாவில் நடைபெற்று வருகிறது. இலங்கை உட்பட 85 நாடுகள் இதில் பங்கு கொள்கின்றன. உயர்தர வகுப்புகளில் குறைந்தது ஒரு அயல்நாட்டு மொழியையாவது கட்டாயமாகப் போதிக்க வேண்டும் என்ற விஷயம் பற்றி இம் மகாநாடு விவாதித்து வருகிறது.

## சட்டவிரோத கடிகாரங்கள் கைப்பற்றப்பட்டன

### டத்தியவருக்கு ரூ. 2250 அபராதம்

மாவிட்டபுரம், செவ்.

காரைநகர் கடற்படை முகாமைச் சேர்ந்த கடற்படை சாரதி திரு பி. எம். சில்வா சட்டவிரோதமாக 15 கைக் கடிகாரங்களை விற்பனை செய்ய முயன்றபோது அச்சுவேலியிலிருந்து சுற்றி வந்த காங்கேசன்துறை பொலிஸ் உத்தியோகஸ்தர்களான குமாரலிங்கம், பீரிஸ் ஆகிய இருவராலும் கைது செய்யப்பட்டு கைக்கடிகாரங்களும் கைப்பற்றப்பட்டன.

கைதுசெய்யப்பட்டவர் காங்கேசன்துறை சப்-கலெக்டர் திரு. டொட்றிகோ முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டு, விசாரணை செய்தபின் வடபகுதி சுங்க கலெக்டர் திரு. ஆலிஸ் முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டார்.

விசாரணை நடத்திய திரு. ஆலிஸ், கைப்பற்றப்பட்ட கடிகாரங்களை பறிமுதல் செய்ய உத்தரவிட்டு சாரதியை 2250 ரூபா அபராதம் செலுத்தும்படி உத்தரவிட்டார்.

கைப்பற்றப்பட்ட கடிகாரங்கள் அண்மையில் கடற்படையினரால் நடுக்கடலில் வைத்துக் கைப்பற்றப்பட்ட கள்ளக் கடத்தல் கப்பலிலிருந்து எடுக்கப்பட்டதாக நம்பப்படுகிறது.

இதைத் தொடர்ந்து காங்கேசன்துறை உதவி பொலிஸ் சுப்பிரிண்டன் திரு செனிவரத்ன தலைமையில் சென்ற பொலிஸ் கோஷ்டி கடற்படை கமாண்டரின் உதவியுடன் கடற்படை முகாமைச் சோதனையிட்டனர். சோதனையின்போது எதுவும் கைப்பற்றப்படவில்லை.

## மானிப்பாயில் நடைபெறும் சர்வதேச கூட்டுறவாளர் தினவிழா

### இரு அமைச்சர்கள் கலந்து கொள்கிறார்கள்

யாழ்ப்பாணம், புதன்

சர்வதேசக் கூட்டுறவாளர் தின விழாவை வருடாவருடம் மாவட்ட ரீதியில் கொண்டாடும் வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச் சபையினர் இவ்வருடக் கூட்டுறவுதின விழாக் கொண்டாட்டத்தை நாளை தொடக்கம் மூன்று நாட்களுக்கு மானிப்பாய் இந்துக்கல்லூரியில் நடாத்தவிருக்கின்றனர். மூன்று நாட்களிலும் கூட்டுறவு ஆணையாளரும், இரு அமைச்சர்களும் பிரதம விருந்தினர்களாகக் கலந்துகொள்வர்.

**பொருட்காட்சி**

கூட்டுறவுதின விழாவை யொட்டி பொருட்காட்சியும் நடைபெறும். பொருட்காட்சியில் நெசவுக் கைத்தொழில், கயிற்றுத்தொழில், மட்பாண்டத் தொழில், பாவை செய்தல், வெங்காயக்கூடை பின்னுதல், பழரசங்கள் சேமித்துவைத்தல் ஆகிய பதார்த்தங்கள் சேமித்துவைத்தல் ஆகிய குடிசைக் கைத்தொழில்கள் பொருட்காட்சிக்கு வைக்கப்படும்.

**வாகனப் பவனி**

வெள்ளிக்கிழமை வாகனப் பவனி ஒன்று ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது. இந்த வாகனப் பவனி யாழ்ப்பாண முற்றவெளி மைதானத்திலிருந்து அன்று பிற்பகல் 2 மணிக்குப் புறப்பட்டு காங்கேசன்துறை வீதி வழியாக மருதனார்மடம் சென்று அங்கிருந்து மானிப்பாய் வீதிவழியாக மானிப்பாய் செல்லமுத்து விளையாட்டரங்கை அடையும். பவனியை யாழ், மேயர் ஆரம்பித்துவைப்பார்.

கூட்டுறவாளர்தின விழாவை யொட்டி கட்டுரை, நாடகம், பேச்சுப் போட்டிகள் நடத்தப்பட்டன. சனிக்கிழமை 66 மைல் சைக்கிள் ஓட்டப் போட்டி ஒன்று நடைபெறும்.

வியாழக்கிழமை நடைபெறும் முதல் நாள் நிகழ்ச்சிகளுக்கு கூட்டுறவு ஆணையாளர் ஏச். ஈ. வணசிங்கா பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். அன்றைய தினம் கூட்டுறவுக் கொடியை யாழ். அரசாங்க அதிபர் திரு. நெவில் ஜயவீரா ஏற்றிவைப்பார்.

இரண்டாம் நாள் நிகழ்ச்சிகளில் காணி நீர்ப்பாசன மந்திரி பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். மூன்றாம் நாள் நிகழ்ச்சிகளுக்கு ஸ்தலஸ்தாபன மந்திரி திரு. எம். திருச்செல்வம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

மூன்று நாட்களிலும் நாதஸ்வர இசை, நாடகம், நடனம், கிராமியக் கலைகள் ஆகிய கலை நிகழ்ச்சிகள் நடைபெறும்.

## இங்கிலாந்துக்கே வெற்றி

லீட்ஸ், ஜூலை 13

இங்கிலாந்துக்கும் நியூஸிலாந்துக்குமிடையே இங்கு நடைபெற்ற மூன்றாவதும், இறுதியுமான கிரிக்கெட் டெஸ்டில் இங்கிலாந்து ஒரு இனிங்ஸ் 187 ஓட்டங்களால் வெற்றியடைந்தது. மூன்றாவது கிரிக்கெட் டெஸ்ட் இன்று முடிவடைந்தது.

நியூஸிலாந்து தனது முதல் இனிங்ஸில் 193 ஓட்டங்களும் இரண்டாவது இனிங்ஸில் 169 ஓட்டங்களும் எடுத்தது. இங்கிலாந்து முதல் இனிங்ஸில் 4 விக்கெட்டுகள் நஷ்டத்துக்கு 546 ஓட்டங்கள் எடுத்தது.

இரு கோஷ்டிகளுக்குமிடையே நடைபெற்ற மூன்று கிரிக்கெட் டெஸ்டுகளில் இங்கிலாந்தே வென்றது.

தொழில் நுட்ப உத்தியோகஸ்தர்களை

## இலங்கைவர ஊக்குவிக்கும் மந்திரியின் திட்டம்

கொழும்பு, செவ்வாய்

வெளிநாடு சென்றிருக்கும் என்ஜினியர்கள், தொழில் நுட்ப உத்தியோகஸ்தர்கள், விமானிகள் ஆகியோரைக் கூடிய ஊதியமும், நல்ல வேலைவாய்ப்பும் கொடுத்து அவர்களை இலங்கை வருவிப்பதற்கான ஏற்பாடுகளை செய்யப்பட்டிருக்கிறது.

இதுசம்பந்தமாக ஸ்தலஸ்தாபன மந்திரி திரு. மு. திருச்செல்வம் தயாரித்துள்ள திட்டத்தை அரசாங்கம் ஏற்றுக்கொண்டால் வெளிநாடுகளில் இருக்கும் இலங்கையைச் சேர்ந்த பல என்ஜினியர்களும், விமானிகளும், தொழில் நுட்ப உத்தியோகஸ்தர்களும் இலங்கை வர வாய்ப்புண்டாகும்.

இலங்கையில் தொழில் நுட்ப உத்தியோகஸ்தர்களுக்கு பெருந்தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால் பல அபிவிருத்தித் திட்டங்கள் தடைப்பட்டுள்ளது. இதனை நிவர்த்தி செய்ய வெளிநாடுகளில் தொழில் நுட்ப உத்தியோகஸ்தர்களாகக் கடமையாற்றுபவர்களை இங்கு வரவாய்ப்புண்டாக்கும் வகையில் அதிக சம்பளமும், உயர்ந்த பதவிகளும் அளிக்கும் திட்டமொன்றை அமைச்சர் திருச்செல்வம் தயாரித்துவருகிறார்.

## "வேலை கிடைத்தால் சிங்களம் படிப்போம்"

யாழ்ப்பாணம், புதன்

வேலையற்றிருக்கும் விஞ்ஞானப் பட்டதாரிகளுக்கு எந்த இலாகாவிலும் அரசாங்கம் வேலை வழங்க முன்வரும்பட்சத்தில் அவர்கள் சிங்களம் படிக்கத் தயாராக இருப்பதாக வேலையற்றிருக்கும் விஞ்ஞானப் பட்டதாரிகள் சங்கம் ஏகமனதாகத் தீர்மானித்துள்ளது.

ப்ப-க்கு அதிகமான விஞ்ஞானப் பட்டதாரிகள் கடந்த 5 வருடங்களாக வேலையற்றிருப்பதாகவும், இவர்கள் உத்தியோகம்பெற எடுத்த முயற்சிகள் பலனளிக்கவில்லையென்றும் கூறப்படுகிறது.

2-வது சதிவழக்கு

## முடிக்குரிய வழக்கறிஞர் மனு மறுக்கப்பட்டது

கொழும்பு, செவ்வாய்

இன்று இரண்டாவது சதி வழக்கு மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது முடிக்குரிய வழக்கறிஞர் ஒருவரின் மனு மறுக்கப்பட்டது.

சதிவழக்கு நீதியரசர்கள் தெரிவித்த குறிப்பு சம்பந்தமாக விளக்கமொன்றைக் கேட்பதற்கு மனு கோரப்பட்டிருந்தது.

முடிக்குரிய வழக்கறிஞரான திரு. வி. எஸ். ஏ. புள்ளநாயகம், உதவி சொலிசிட்டர் ஜெனரல் திரு ஆனந்த பெரேரா மூலம் இதற்கான மனுவைத் தாக்கல்செய்திருந்தார்.

இரண்டாவது சதிவழக்கு விசாரணை நீதியரசர்கள் ஜி. பி. ஏ. சில்வா (தலைவர்), வி. மாணிக்கவாசகர், ஏ. டபிள்யூ. எச். அபயசேகர ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றுவருகிறது.

இரு எதிரிகள் மீதான தீர்ப்பு இன்று வழங்கப்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

## உத்தியோக உயர்வு

### 14 தமிழருக்கு கிடைத்தது

பண்டாரவளை, செவ்

பதினாலு தமிழ் உத்தியோகத்தர்கள் இரண்டாம் குமாஸ்தா சேவையிலிருந்து முதலாம் வகுப்பு குமாஸ்தா சேவைக்கு உத்தியோக உயர்வு பெற்றுள்ளார்.

உத்தியோக மொழியில் தேர்ச்சி இல்லாததன் காரணமாக இவ் உத்தியோகத்தர்கள் உயர்வு தடைப்பட்டிருந்ததென்பது குறிப்பிடத்தக்கது.

## இலங்கைக்கு சர்வதேச கிரிக்கெட் அந்தஸ்து

புதுடில்லி, ஜூலை 13

இம்பீரியல் கிரிக்கெட் சம்மேளனத்தில் இலங்கையையும் ஒரு அங்கத்தினராகச் சேர்க்கவேண்டும் என இந்தியா பிரேரிக்கவிருக்கிறது. இம்மாதம் லண்டனில் நடைபெறவிருக்கும் சம்மேளனக் கூட்டத்தில் அகில இந்திய கிரிக்கெட் போர்ட் தலைவர் பரோடா மகாராஜா இவ்விஷயத்தைக் கொண்டுவருவார் என அறிவிக்கப்பட்டுள்ளது. சென்ற தடவை மைக்கேல் திஸேரா தலைமையில் இந்தியா சென்று விளையாடிய இலங்கை கிரிக்கெட் கோஷ்டி இந்திய ரசிகர்களை வெகுவாகக் கவர்ந்ததைத் தொடர்ந்து, இலங்கையை சர்வதேச கிரிக்கெட் அந்தஸ்துக்கு உயர்த்தும் முயற்சியில் இந்தியா ஈடுபட்டது.

### மணிவாக்கு

வெளிப்பார்வைக்கு கேவலமாயுள்ளதும், ஆனால் உள்ளே அன்பு நிறைந்ததுமான ஒரு குடிசை தான் கடவுளர்களை வைப்பதற்கு ஏற்ற ஒரு மாளிகை. அன்பில்லாத மாளிகையோ வனவிலங்குகள் வசிப்பதற்கு யோக்கியமாயுள்ள ஒரு குகை.

—இங்கர்சால்


# ஈழநாடு

EELA NADU National Tamil Daily. Post Box 49. Jaffna.
Grams: "EELANADU" Jaffana
Phone: 389

யாழ்ப்பாணம் விசுவாவசு ஆண்டு
ஆனி 30 (14 7-65)


## கூட்டுறவுபண்டகசாலைகளும் சமாஜங்களும்

நாளை நடைபெறவிருக்கும் சர்வதேச கூட்டுறவாளர் தினக் கொண்டாட்டங்கள் பற்றிய செய்தியைப் பிறிதோரிடத்தில் பிரசுரித்திருக்கிறோம். மாலைப் பாயில் இக்கொண்டாட்டங்களை கூட்டுறவு ஆக்க ஆணையாளர் திரு வணசிங்கா நேரடியாக ஆரம்பித்து வைப்பது, இப்பகுதியில் கூட்டுறவு இயக்க வளர்ச்சிக்கு ஒரு எடுத்துக்காட்டாகும்.

இச்சமயத்தில் கூட்டுறவு இயக்கத்தை தீவிரமாகவும், ஜனநாயக முறையிலும் வளர்க்கும் அவசியத்தை இங்கு வற்புறுத்தவேண்டும். கூட்டுறவு கட்டுக்கோப்புக்கு, அடிப்படை சங்கங்களே ஆதாரமாக விளங்குகின்றன. எனவே சங்க வளர்ச்சியில் ஆர்வம் கொண்டவர்கள் அடிப்படைச் சங்கங்களில் இடம் பெற வேண்டியது அவசியம்.

பண்டகசாலைச் சங்கங்கள், பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றைப் பொறுத்தவரை இந்த அங்கத்தினர்கள் தங்களுக்குத் தேவையான பொருட்களை விற்பனை நிலையங்களிலேயே வாங்கிக்கொள்ளவும், சங்கக் கூட்டங்களில் பங்கு பற்றுதல், இதர நடவடிக்கைகளில் சிரத்தை எடுத்தல் ஆகிய அம்சங்களில் ஊக்கமளிக்கப்படவும் வேண்டும்.

கூட்டுறவு இலாகா அதிகாரிகளும், சங்க உத்தியோகஸ்தர்களும் அதிக சங்கங்களையும், அங்கத்தினர்களையும் சேர்ப்பது மூலம் இடமாற்றம் கவனம் அல்லது மரணத்தால் ஏற்படும் காலிஸ்தானங்களை நிரப்பவேண்டும். இந்த வகையிலேயே கூட்டுறவு இயக்க வளர்ச்சிக்கு புத்துணர்ச்சியூட்ட முடியும்.

வாழ்க்கைச் செலவைக் குறைக்கும் முயற்சியிலீடுபட்டிருக்கும் அரசாங்கம், கூட்டுறவு விற்பனை நிலையங்கள் மூலமே நியாயமான விலைகளுக்கு பொருட்களை விற்பனை செய்ய முடியும் என்ற உண்மையைப் படிப்படியாக உணர்ந்து வருகிறது.

இந்த நிலையில் அதிக கூட்டுறவு நிலையங்களும் இவை சம்பந்தமாக இடைவிடா பிரச்சாரமும் தேவைப்படுகிறது இவ்வகையான பிரசாரங்கள் மூலமே அதிக கூட்டுறவுஸ்தாபனங்களை அமைக்கும்படி மக்களை ஊக்கப்படுத்தவும் முடியும்.

கூட்டுறவு விற்பனை நிலையங்கள் பொருட்களைக் குறைந்த லாபத்துக்கு விற்கவேண்டும் என்பதே அனைவரும் எதிர்பார்க்கும் விஷயமாகும். இதை சாத்தியமாக்க வேண்டுமானால் யூனியன்களுக்கும், பண்டகசாலைச் சங்கங்களுக்குமிடையேயான உறவு மீண்டும் புனரமைக்கப்படவேண்டும்.

சென்னையிலும், இலங்கையின் சில பாகங்களிலும் நடைமுறையிலுள்ள யூனியன்களால் நடத்தப்படும் சங்கிலித் தொடர் போன்ற பண்டகசாலை முறை இவ்வகையில் பின்பற்றத்தகுந்தது.

இலங்கையின் கூட்டுறவு இயக்கத்தில் மொத்த, சில்லறை விற்பனவு நிலையங்கள் செயல் புரியும் முறைபற்றி பூரணமாக புனராலோசனை செய்யவேண்டுமென வற்புறுத்த விரும்புகிறோம். பாவனையாளர்களுக்கு மலிவான விலையில் பொருட்கள் கிடைக்கச் செய்வதற்கேற்ற முறையில் மொத்த, சில்லறை விற்பனவு நிலையங்களுக்கு மத்தியில் உள்ள யூனியன்களை முடிக்கவரை குறைப்பது பற்றியும் புனராலோசனை செய்யவேண்டும் என்று வற்புறுத்துகிறோம்.

# கிறீஸ்தவ மத நம்பிக்கை மேலைநாடுகளில் குன்றுகிறது

## அமெரிக்கரிலும் பார்க்க அதிக ரஷ்யர்கள் ஆலயம் செல்கின்றனர்

யாழ்ப்பாண கிறிஸ்தவ இளைஞர் இயக்கத்தினர் சென்ற திங்கட்கிழமை, ரெமர் மண்டபத்தில் மகாநாடு ஒன்றை நடத்தினர். அண்மையில் ஆசியா, ஆபிரிக்க, ஐரோப்பா, அமெரிக்கா ஆகிய நாடுகளில் சுற்றுப்பிரயாணம் செய்த இலங்கை மெதடிஸ்த திருச்சபையின் செயலாளர் வண டாக்டர் டி. ரி. நைல்ஸ் மேற்படி மகாநாட்டில் கலந்துகொண்டு தமது பிரயாண அனுபவம் பற்றி ஒரு சொற்பொழிவு நடத்தினார், அச்சொற்பொழிவின் சுருக்கம் இங்கே கட்டுரையாக பிரசுரிக்கப்படுகிறது.

சென்ற மார்கழி மாதம் பிலிப்பைன்ஸ் தீவுகளின் தலைநகரான மணிலாவில் நடைபெற்ற ஆசிய கிறிஸ்தவ இளைஞர் சங்க மகாநாட்டில் நான் கலந்துகொண்டபோது அங்கு சமூகமாகவிருந்த இளைஞர்பிரதிநிதிகளை கவனமாகக் கவனித்ததில் நான் அவதானித்தது இரண்டு ஒன்று ஆகிய இளைஞர்கள் சகல விடயங்களிலும் சபையுடன் இணங்கி ஒத்துப்போகின்றவர்களாகவிருக்கிறார்கள். இரண்டாவது அரசியலைப் பொறுத்தமட்டில் அவர்கள் ஊமைகளாக விளங்குகிறார்கள்.

ஐரோப்பிய, அமெரிக்க இளைஞர்களுடன் ஆசிய இளைஞர்களை ஒப்பிடுகையில் இந்த ஒத்துப்போகும் தன்மை மிகுந்து காணப்படுகின்றது. எதுவாகிலும் பார்க்கும் பொழுது ஆசியாவின் இளைஞர்கள் ஒழி படுத்த முடியாத அளவிற்கு புரட்சி உள்ளம் கொண்டவர்களாக விளங்குகையில், ஆசிய கிறிஸ்தவ இளைஞர்களின் இம்மனப்போக்கு ஆச்சரியத்தை விளைவிப்பதாய் உள்ளது. அரசியல் பற்றிய அக்கறையே இல்லாத இவர்கள் அரசியல் பற்றிய பேச்சையே வெறுத்து ஒதுக்கியதையும் நான் கண்கூடாகக் காணக்கூடியதாக இருந்தது.

கானாவில் நிக்ருமாவின் கீழும் நைஜீரியாவிலும் ஜனநாயகத்தை இயங்கவைப்பதில் பெரும் வேறுபாடுகளை நான் அவதானித்தேன். நைஜீரியாவிலும் பார்க்க கானாதேசத்தில் திட்டங்கள் திட்டப்படி விரைவில் நிறைவேறி வருகின்றன. ஜனநாயகத்திற்கும், சுதந்திரத்திற்கும் இடையிலுள்ள உறவு அல்லது தொடர்பு ஆசியவிலும், ஆபிரிக்காவிலும் இன்னமும் தீர்க்கப்படவில்லையென்றே நான் உணர்கிறேன்.

சுவிற்சர்லாந்தில் உலகத் திருச்சபைகள் சங்கத் தலைமை அலுவலகத்தில் மூன்று வார காலத்தைச் செலவிட்டேன். உலகத் திருச்சபைகள் சங்கம் மார்க்க சமூகாய விடயங்கள் உள்ளிட அகல உலகத்திலும் பரந்த அளவில் உடன்படிக்கைகளையும், பொருத்தங்களையும் செய்ய அது சளையாது முயற்சி எடுத்துவருகிறது.

1964-ம் வருடத்தில் தான் அமெரிக்காவில் கோவிலுக்குச் சென்று வழிபடுகிறவர்கள் தொகை வீழ்ச்சியடைந்து இருக்கிறது. ஆலயத்திற்குப் போவது அமெரிக்க மக்களின் சமுதாய வாழ்வின் ஓர் அம்சமாக விளங்கி வந்திருக்கிறது. ஆனால் இப்போதோ ஆலயத்திற்குப் போகவேண்டுமென்ற எண்ணத்தைவிட்டு அனேக அமெரிக்கர்கள் முன்போல் சிரத்தை எடுத்துக்கொள்ளுவதில்லை.

சனத்தொகை விகிதாசாரத்தைக் கொண்டு கவனிக்கும் பொழுது அமெரிக்கர்களிலும் பார்க்க ஆலயத்திற்குச்சென்று வழிபாடு செய்யும் ரஷ்யர்களுடைய தொகை இப்பொழுது அதிகரித்துள்ளது. லெனின் கிராட் நகரத்தில் மட்டும் ஞாயிறுதோறும் 60,000 மக்கள் கோவிலுக்குச் சென்று வழிபடுகிறார்கள். அங்குள்ள கதீட்ரல் தேவாலயத்தில் மட்டும் முண்டியடித்துக் கொண்டு 10,000க்கு அதிகமான மக்கள் மூன்று மணி நேர ஆராதனைகளில் உற்சாகமாகக் கலந்துகொண்டார்கள். ஐந்து வயதிற்கும் 18 வயதுக்குமிடைப்பட்ட சிறுவர்களுக்கு மார்க்க போதனை செய்வது சட்டவிரோதமென்று ரஷ்ய நாட்டுச் சட்டங்கள் தடுத்து நின்ற போதிலும் ஐந்து வயது பராயத்தை அடையுமுன்னமே அங்குள்ள பெற்றோர்கள் தம் சிறுவர்களுக்குசொல்லித் தரும் மார்க்க போதனை அவர்களை இப்படி அதிசயிக்கத்தக்க விதத்தில் காத்து வருகிறது. பிரித்தானியாவில் ஆலயத்துக்குப் போகிறவர்கள் தொகை பெருகிவருகிறது. மொத்த சனத்தொகையில் 10 விகித மானவர்கள் மட்டும் தான் ஆலயத்திறகு வழிபாட்டுக்கு செல்கின்றார்கள்.

மனித உரிமைகள் இயக்கத்தார் அமெரிக்காவில் சாதித்துவரும் சாதனைகள் பாராட்டப்படவேண்டியதாகும் கிறிஸ்தவ தேவாலயங்களும் இவ்வகையில் தம் பங்கை சிறப்பாக செய்து தருகின்றன.

மேலைநாட்டுக் கிறிஸ்வவர்கள் மத்தியில் கிறிஸ்தவ நம்பிக்கை தளர்ந்து வருகிறது. அந்த நம்பிக்கையின்மை ஆசியாவிலும் பரவுவதை நாம் காணலாம், பழைய அமைப்புகள் சிதைவதையும், அவற்றிலிருந்து விசுவாசங்கள் நம்பிக்கை தளர்ந்து போகிற ஓர் காலத்தில் நாம் அகப்பட்டுக் கொண்டோமோவென நான் அதிசயப்பட்டேன்.

# ஆசிரியர் தொழிலை மட்டும் நாடாமல் வேறு வேலைக்கும் முயற்சிக்க வேண்டும்

## பட்டதாரிகள் பற்றி ஜி. ஜி.

யாழ்ப்பாணம், செவ்.

பட்டதாரிகள் ஆசிரிய தொழிலை மட்டும் விரும்பாமல் வேறு உத்தியோகங்கள் பெறவும் முயற்சி எடுக்க வேண்டும். தற்பொழுதுள்ள நிலையில் வேலையற்றிருக்கும் எல்லாப் பட்டதாரிகளுக்கும் உடனடியாக ஆசிரிய வேலைகிடைக்கும் என எதிர்பார்க்க முடியாது. ஆதலால் பட்டதாரிகள் தாங்கள் எச்செந்த துறையில் திறமை புள்ளவர்களாக இருக்கிறார்களோ, அந்தந்த துறையில் வேலை பார்க்க முன் வரவேண்டும்.

வேலையற்றிருக்கும் பட்டதாரிகளும், பட்டதாரிகளாகவுள்ள மாணவ ஆசிரியர்களும் தமிழ் காங்கிரஸ் தலைவர் திரு ஜி ஜி. பொன்னம்பலத்தை நேரில் பேட்டிகண்டு தங்கள் குறைகளை தெரிவித்தபோது அவர் மேற்கண்டவாறு கூறினார் இப் பேட்டியின் போது உடுப்பிட்டி எம், பி திரு எம் சிவசிதம்பரமும் சமூகமளித்திருந்தார்.

400 விஞ்ஞான பட்டதாரிகள் கடந்த பல வருடங்கள் வேலையற்றிருப்பதாகவும், இவர்களில் 165 பேர் பெண்களென்றும் கடந்த காலத்தில் தங்கள் குறைகளை பலதடவைகள் எடுத்துக் கூறியும் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லையென்றும், இக் கோஷ்டித் தலைவர் எடுத்துக் கூறினார்

திரு ஜி ஜி பொன்னம்பலம் பட்டதாரிகளின் குறைகளை கேட்டறிந்த பின்பு கூறியதாவது:- வேலையற்றிருக்கும் நூற்றுக் கணக்கான பட்டதாரிகளின் குறைபாடுகளைப் பற்றி நான் கல்விமந்திரிக்கு நேரில் தெரிவித்தேன் இதற்கென புதிய திட்டமொன்று அமைத்து, பட்டதாரிகளுக்கு வேலை கொடுப்பதாக அவர் தெரிவித்தார். பட்டதாரிகள் ஆசிரிய தொழிலை மட்டும் விரும்பாமல் வேறு தொழில்பார்க்கவும்முன் வரவேண்டும். அப்பொழுது தான் இப்பிரச்னை கூடியவரையில் தீரவழியுண்டு.

வேலையற்றிருக்கும் பட்டதாரிகள் எந்தெந்த துறையில் தாங்கள் வேலைபெற விரும்புவதாக ஒரு பட்டியல் தயாரித்து தந்தால் அவர்கள் அந்தந்தத் துறையில் வேலை பெறமுயற்சிப்பேன், யாழ்ப்பாணத்திலுள்ள பாடசாலைகளில்பணிமனை இயல்போதிப்பதற்கு தேர்ச்சிபெற்ற ஆசிரியர்கள் குறைவாக இருக்கிறார்கள், இதுபற்றி நான் கல்வி மந்திரிக்கு தெரிவித்து பணிமனை இயல் ஆசிரியர்கள் இல்லாத பாடசாலைகளுக்கு ஆசிரியர்களை நியமிக்க நடவடிக்கை எடுப்பேன்,

பட்டதாரிகளாகவுள்ள மாணவ ஆசிரியர்கள், குறைந்த சம்பளம் பெறுவதாக என்னிடம் கூறப்பட்டுள்ளது, இது பற்றியும் நான் கல்விமந்திரியுடன் பேசி, அவர்களுக்கு பட்டதாரிகள் சம்பளம் வழங்க முயற்சிப்பேன்.

## பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம், புதன்

திருக்கேதீச்சரம் கௌரி அம்பாள் வித்தியாலய பரிசளிப்பு விழா இன்று மாலை திருஞானசம்பந்தர் மடத்தில் சோமசுந்தரையா வைத்தியநாதன் தலைமையில் நடைபெறும். பிரதம விருந்தினர்களாக வட்டார வித்தியாதரிசி திரு. சி. பொ. சிவபாதம், மாந்தைப் பிரிவு காரியாதிகாரி திரு. த. வாமதேவன் ஆகியோர் கலந்துகொள்வர்,

திருமதி வைத்தியநாதன் பரிசில்கள் வழங்குவார், வித்தியாலய மாணவ மாணவிகளின் கதம்ப நிகழ்ச்சிகளும் இடம் பெறும்.

## ஓயாறன்

அவசர வேலையாக கொழும்புக்குச் செலவேண்டி ஏற்பட்டது, கொழும்புக்குச் செல்வதென்றால் மிகவும் பயக்கமாகவுள்ளது. அங்கு 'டிங்கி' க்காய்ச்சல் அதிகம் பரவியுள்ளதாயும், தொத்துநோய்போல பலரையும் பிடிப்பதாயும் அறிகிறோம். கொழும்பிலிருந்து பல அன்பர்கள் நேயுடன் இங்கு வந்துள்ளதைக்கண்ட இந்த யாத்திரை செய்யவே மனமில்லை, என்றாலும் போகத்தான் வேண்டியுள்ளது. கடவுள்மீது பாரத்தைப் போட்டுவிட்டு, "கோயவைச்சாருமாகில் நோக்கி நீ அருள் செய்வாயே" என்று பிரார்த்தித்துப் புறப்படுகிறேன்.

• • •

நாம் என்னென்னமோ திட்டம்போடுகிறோம். ஆனால் எதிர்பாராதபடி ஏதேதோ நடந்துவிடுகிறது. சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளராக இருந்த ஒருவர், ஸ்பெஷல் ஸ்காலர்ஷிப் பெற்று, அமெரிக்காவுக்குத் தம் மனைவியுடன் சென்று சிலவருடகாலம் பயிற்சி பெற்றார். இன்னும் சிலநாட்களில் வெற்றிகரமாக இந்தியா திரும்பவேண்டியவர்; சில வாரங்களுக்கு முன் ஒரு கார் விபத்தில் சிக்கி, தம்பதிகள் இருவருக்கும் படுகாயமுண்டாக ஆஸ்பத்திரியில் ராஜசிகிச்சை நடைபெறுவதாயும், பிழைப்பது தெய்வாதீனம் என்றும் ஓர் அன்பர் மூலம் அறிய மிக வேதனையாக இருந்தது. எந்தச்சமயத்தில் என்ன நடக்குமோ நமக்கு என்ன தெரிகிறது. இதுவரை எவ்வளவோ ஆபத்துக்களுக்குத் தப்பி நாம் இன்னும் உயிருடன் இருப்பதுதான் ஆச்சரியம்!

• • •

குரும்பசிட்டி சன்மார்க்க சபையின் 50-வது ஆண்டு நிறைவு விழா, சென்ற வெள்ளி முதல் 3 நாட்கள், முத்தமிழ் பெருவிழாவாக சிறப்பாக நடந்துள்ளது.

கடைசி நாளன்று கொழும்பு வானொலி தமிழ் நாடகப்பகுதி தலைவர் 'சானா' எனும் சண்முகநாதனுக்கு "கலாஜோதி" என்ற கௌரவப்பட்டத்தை வழங்கி பதக்கமும் அணிந்தனர். லண்டன் கந்தையாபுகழ், 'சானா' நல்ல நகைச்சுவை நடிகர், ஓவியத்துறையிலும், நாடகத்துறையிலும் அவர் செய்துவரும் பணி போற்றத்தக்கது. நம் கலைஞர்களைப் போற்றிக் கௌரவிப்பது நம் கலைகள் வளரப் பெரிதும் உதவும்.

இந்த விழாவை முன்னிட்டு அச்சபையினர் ஓர் அழகான மலர் வெளியிட்டுள்ளனர். சென்ற 50 ஆண்டுகளிலே இச்சபை பலபல துறைகளிலும் செய்துள்ள சேவைகள் வியக்கத்தக்கன. ஒரு கிராமத்தைச் சேர்ந்த சில வாலிபர்கள் கிராம நலனுக்காக உண்மையாக உழைத்தால் எவ்வளவு சாதிக்கலாமென்பதற்கு இச்சபை நல்ல முன்மாதிரியாகவுள்ளது. இதில் சேர்ந்து இதன் வளர்ச்சிக்காகப் பாடுபடுபவர்களைப் பாராட்டுவதுடன், இதைப்போல ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு சில வாலிபர்கள் சேர்ந்து தொண்டாற்றினால் இந்நாடு எவ்வளவோ முன்னேறும், வாழ்க குரும்பசிட்டி சன்மார்க்கசபை. வளர்க அதன் பணிகள்!

• • •

பித்தா பிறைசூடிப் பெருமானே அருளாளாய் எத்தால் மறவாதே நினைக்கின்றேன் மனத்துன்னை வைத்தாய் பெண்ணை தென்பால் வெண்ணெய் நல்லூர் அருட்டுறையுள் அத்தா உனக்காளாய் இனியல்லேனெனலாமே

—சுந்தரமூர்த்திநாயனார்.

# கிழக்கு பாகிஸ்தான் வெள்ளத்தால் 10 லட்சம் மக்கள் பாதிப்பு

## பீகார், அஸ்ஸாமில் ராணுவத்தினர் நிவாரண வேலை செய்கின்றனர்

டாக்கா, ஜூலை 13

கிழக்கு பாகிஸ்தான் வெள்ளப் பெருக்கு காரணமாக 10 லட்சம் பேர் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என அறிவிக்கப்படுகிறது.

மொத்தம் 6 ஜில்லாக்கள் பாதிக்கப்பட்டிருப்பதாயும், சிட்டகாங்கில் 4 பேர் நீரில் மூழ்கினர் என்றும், மற்றும் 4 பேர் நிலச்சரிவில் கொல்லப்பட்டனர். கோமிலா நீரில் மூழ்கியிருக்கிறது. இப்போது சிட்டகாங்கில் வெள்ளப் பெருக்கு குறைந்து வருவதாக அறிவிக்கப்படுகிறது.

பீகாரில் வெள்ளப் பெருக்கு குறைந்து வருகிறது. கரைகட்டு உடைப்புக்கள் இப்போது சீராக்கப்பட்டு வருகின்றன. கேஸி நிலைமை அமைதியுடன் காணப்படுவதாக அறிவிக்கப்படுகிறது.

அஸ்ஸாம் காடுகள் நீரில் மூழ்கியபடியால் மிருகங்கள் மேட்டுப் பாங்கான இடங்களில் தஞ்சம் புகுந்திருக்கின்றனவாம்.

17000 ஏக்கருக்கு மேற்பட்ட நிலங்கள் நீரில் மூழ்கியுள்ளனவாம். ஜோர்ஹாட்டில் 35000 பேர் நீரினுல் பாதிக்கப் பட்டிருக்கிறுர்கள்.

பீகார், அஸ்ஸாம் இரு ராஜ்யங்களிலும் நிவாரண வேலைகளில் துருப்புக்கள் உபயோகிக்கப்பட்டு வருகின்றன.

## ஹெல்சிங்கி மகாநாட்டில் ரஷ்யா, இந்திய வெளிநடப்பு

### ரஷ்ய – சீனர் மோதல்

ஹெல்சிங்கி, ஜூலை 13

இங்கு நடைபெற்று வரும் உலக சமாதான மகாநாட்டிலிருந்து ரஷ்ய, இந்தியப் பிரதிநிதிகள் நேற்று வெளிநடப்புச் செய்தார்கள்.

அமெரிக்காவுடன் கட்டுகொள்வதுதான் ரஷ்யாவின் அக்கறை என அல்பேனிய பிரதிநிதி [illegible] இந்த வெளியேற்றம் நடைபெற்றது. ரஷ்யா, இந்தியா, மங்கோலியா ஆகிய நாடுகளுடன் வேறுசில நாடுகளும் வெளியேற்றம் செய்தன.

அல்பேனிய பிரதிநிதியை பேச அனுமதிக்கக் கூடாது என ரஷ்யப் பிரதிநிதி கேட்டுக் கொண்டார். தலைவர் இதை அனுமதிக்காததால் இச்சம்பவம் ஏற்பட்டது.

ரஷ்ய, சீனப் பிரதிநிதிகள் அதற்குமுன் மோதிக்கொண்டனர்.

சீனப் பிரதிநிதி பேசிய போது வியட்னும் சம்பந்தமான ஜனுதிபதி ஜோன்ஸனின் யோசனையை நிராகரித்தார். ரஷ்யா அமெரிக்காவுடன் சேர்ந்து வியட்னும் பிரச்னையைத் தீர்க்க முயல்வதாகவும் அவர் குற்றஞ்சாட்டினுர்.

### கட்ச் ஒப்பந்தம் பற்றி சாஸ்திரி

புதுடில்லி, ஜூலை 13

கட்ச் விவகாரத்தை இந்திய அரசாங்கம் கையாண்ட விதத்தை பார்லிமெண்ட் காங்கிரஸ்கட்சியின் நிர்வாகக் கமிட்டி ஆதரித்திருக்கிறது.

பிரதமமந்திரி அப்போது பேசுகையில் 1947-ம் ஆண்டு கட்ச் குஜராத் ராஜ்யத்துடன் இணைந்தது என்றும் கூறினுர்.

கட்சில் இந்தியத் துருப்புக்கள் மிக மெதுவாகவே வாபஸ் பெறப்படுகிறதென்ற குற்றச்சாட்டை அவர் மறுத்தார். ஒப்பந்தம் கைபெழுத்தான மறுகணமிலிருந்தே துருப்புக்கள் வாபஸ்பெற ஆரம்பித்து விட்டன எனவும், ஒப்பந்தம் முழுமையாக நிறைவேற்றப்படுகிறதென்றும் அவர் கூறினுர்.

### கெய்ரோவுக்கு பிரிட்டிஷ் கோஷ்டி

லண்டன், ஜூலை 13

பிரிட்டிஷ் நல்லெண்ணத் தூதுகோஷ்டியொன்று கெய்ரோ செல்லுமென்றும், ஐக்கிய அராபியக் குடியரசுடனுன உறவை வளர்க்குமுகமாக இது செல்லுமென்றும் அறிவிக்கப்படுகிறது.

### குடும்பக்கட்டுப்பாடு தகவல் வாரம்

புதுடில்லி, ஜூலை 13

குடும்பக் கட்டுப்பாட்டின் அவசியத்தை மக்கள் நன்குணரச் செய்யுமுகமாக இம்மாதம் 15ந் திகதியிலிருந்து குடும்பக் கட்டுப்பாட்டுத் தகவல் வாரத்தைக் கொண்டாட அரசாங்கம் ஒழுங்குகள் மேற்கொண்டுள்ளது.

### அரபுலீக்குக்கு ராஜீய அந்தஸ்து

புதுடில்லி, ஜூலை 13

டில்லியிலுள்ள அரபுலீக் அலுவலகத்திற்கு ராஜீய அந்தஸ்தை இந்திய அரசாங்கம் வழங்கியிருக்கிறது. இதுசம்பந்தமான ஒப்பந்தம் கெய்ரோவில் கைச்சாத்திடப்பட்டது.

### நாகர்கள் பலாத்காரம்

புதுடில்லி, ஜூலை 13

மணிப்பூரில் நடவடிக்கை நிறுத்த ஒப்பந்தத்தை தலைமறைவு நாகர்கள் மீறியிருக்கின்றனர் என்றும், இதுசம்பந்தமாக தகுந்த நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும் என்றும் அரசாங்க அதிகாரி ஒருவர் கூறினுர்.

### கலப்படத்தை தடுக்க திட்டம்

புதுடில்லி, ஜூலை 13

நாடு பூராவும் கலப்படத்தைத் தடுப்பதற்காக ரூ. 12 கோடி செலவிலான திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. அத்துடன் கலப்பட எதிர்ப்புச் சட்டத்தையும் தீவிரமாக அமுல்நடத்த அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

### காஷ்மீரில் நபிகள் தினம்

ஸ்ரீநகர், ஜூலை 13

நேற்று காஷ்மீர் முழுதும் நபிகள் தினம் அனுஷ்டிக்கப்பட்டது. பல்லாயிரக்கணக்கான முஸ்லிம்கள் ஸ்ரீநகரிலுள்ள ஹஸ்ரத்பால்பள்ளியில் பிரார்த்தனைபுரிந்தனர். புனிதச்சின்னம் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தது.

### சாஸ்திரி யூகோ. செல்வார்

புதுடில்லி ஜூலை 13

இந்தியப்பிரதமர் திரு சாஸ்திரி இம்மாத இறுதியில் யூகோஸ்லவேக்கியாவுக்கு செல்லவிருக்கின்றுர். யூகோஸ்லவேக்கிய அரசாங்கத்தின் அழைப்பின் பேரிலேயே திரு. சாஸ்திரி அங்கு செல்கிறுர். திருமதி சாஸ்திரியும் அவருடன் செல்வார்.

### பெல்கிரேட்டில் நேரு பொருட்காட்சி

பெல்கிரேட். ஜூலை 13

யூகோஸ்லேவியத் தலைநகர் பெல்கிரேட்டில் நடைபெற்று வரும் நேரு பொருட்காட்சியை லட்சக்கணக்கான மக்கள் பார்வையிட்டுவருகின்றனர். இது 6 பிரிவுகளை கொண்டிருக்கிறது. அபூர்வமான பல புகைப்படங்களும் இதில் இடம்பெற்றிருக்கின்றன.

யூகோ தகவல் அமைச்சு நேருபற்றி ஒரு நூலை வெளியிட்டிருக்கிறது.

### கிரேக்க மந்திரி பதவிநீக்கம்

ஏதென்ஸ், ஜூலை 13

கிரேக்க பாதுகாப்பு மந்திரி திரு. கருபாலியஸ் பதவிநீக்கம் செய்யப்படுவாரென்றும், அவர் ராஜிநாமா செய்ய மறுத்துவிட்டதே இதற்குக் காரணம் என்றும் அறிவிக்கப்படுகிறது. இவர் கிரீஸின் அரசியல் நெருக்கடி ஒன்றுக்கு காரணமாகவிருந்துவருவதேகாரணம்.

### நாசரின் விருப்பம்

புதுடில்லி ஜூலை 13

பாரதமும் பாகிஸ்தானும் பரஸ்பர நல்லெண்ணத்துடனும் நேசஉறவோடும் இருக்கவேண்டுமென ஐக்கிய அரபிக் குடியரசு ஜனுதிபதி நாசர் விருப்பம் கொண்டிருப்பதாகவும் அவர் அதனை தமக்கு வெளியிட்டதாகவும் இந்தியப் பிரதமர் திரு. சாஸ்திரி தெரிவித்துள்ளார்.

### இன்னும் 31 காலனிகள்

லண்டன், ஜூலை 13

பிரிட்டன் வசம் இன்னும் 31 காலனிகள் இருப்பதாயும், இவற்றின் மொத்த ஜனத்தொகை 1 கோடி என்றும் அறிவிக்கப்படுகிறது.

### நீக்ரோக்கள் தடுக்கப்பட்டனர்

வாஷிங்டன், ஜூலை 13

நேற்று அலபாமாவில் நடைபெற்ற 400 பேரடங்கிய நீக்ரோக்கள் ஊர்வலத்தை பொலிசார் இடையில் தடுத்துவிட்டனர்.

### இசைக்கலை மன்ற நிர்வாகிகள்

சாவகச்சேரி, செல்

தென்மராட்சி இசைக்கலை மன்ற புதுவருட நிர்வாகிகளாகப் பின் வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர். போஷகர்கள்: திரு. வி என். நவரத்தினம் (சாவகச்சேரி எம். பி.) திரு. இ. டா சிவகுரு. திரு எம் ஸ்ரீகாந்தா, திரு. ஆர். சிதம்பரப்பிள்ளை, திரு. எஸ் விஜுசித்தம்பி, திரு. ஏ. தம்பையா, தலைவர்: திரு க. இராமச்சந்திரன், உபதலைவர்கள்: திருவாளர்கள் ஆர் எஸ் இராயலிங்கம், என் பொன்னம்பலம். காரியதரிசி: திரு வே. நடேசன், தனுதிகாரி: திரு ரி இரத்தினராசா.

## டேவிஸ் ஹானேய் விஜயம் பற்றி கன்சர்வேட்டிவ் கண்டனம்

### வடவியட்னும் தலைவர்களுடன் பிரிட்டிஷ் மந்திரி பேச்சு

லண்டன், ஜூலை 13

பிரிட்டிஷ் மந்திரி திரு. ஹரோல்ட டேவிஸ் ஹானேய்க்கு விஜயம் செய்திருப்பது குறித்து எதிர்க் கட்சியினர் தெரிவித்த கண்டனங்களுக்கு திரு. வில்சன் பதிலளித்துப் பேசுகையில் டேவிஸின் விஜயத்தை ஆதரித்தார்.

திரு. டேவிஸ் வடவியட்னும் தலைவர்களுடன் சுமார் 7 மணி நேரம் பேச்சு நடத்தியிருக்கிறுர் என்றும், அந்நாட்டுப் பிரதமரைச் சந்திக்கவிருக்கிறுர் என்றும் திரு. வில்சன் மேலும் தெரிவித்தார்.

ரஷ்யா மேலும் உதவும்

இதற்கிடையில் வடவியட்னுமுக்கு மேலும் ராணுவ, பொருளாதார உதவியளிக்க ரஷ்யா முன்வந்திருக்கிறது இதுசம்பந்தமான ஒப்பந்தம் மாஸ்கோவில் கைச்சாத்திடப்பட்டது.

ஜனுதிபதி ஜோன்ஸனின் விசேஷ பிரதிநிதி திரு. ஹரிமன் நேற்று மாஸ்கோ வந்து சேர்ந்தார் தாம் ஜனுதிபதி ஜோன்ஸனிடமிருந்து செய்தி எதையும் கொண்டுவரவில்லை என அவர் கூறினுர்.

அதே சமயம் தென்வியட்னுமுக்கு 15,000 தென் கொரியத் துருப்புக்களை அனுப்பும் திட்டத்தை அங்கீகரிக்குமாறு தென்கொரிய ஜனுதிபதி சட்டசபையைக் கேட்டிருக்கிறுர்.

8 விமானங்கள் [illegible] சுடப்பட்டன [illegible]

கடந்த சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் 8 அமெரிக்க விமானங்களைச் சுட்டுவீழ்த்தியதாய் வடவியட்னும் அறிவித்திருக்கிறது.

### நியூஸிலந்து தோற்கிறது?

லீட்ஸ், ஜூலை 13

இங்கிலாந்துக்கும் நியூஸிலாந்துக்குமிடையே இங்கு நடைபெற்றுவரும் கிரிக்கெட் போட்டியில் நியூஸிலந்து தன் 2-வது இன்னிங்ஸில் 9 விக்கெட் நஷ்டத்திற்கு 161 ரன்கள் எடுத்தது.

இங்கிலாந்து முதல் இன்னிங்ஸில் 4 விக்கெட் நஷ்டத்திற்கு 546 ரன்கள் எடுத்து ஆட்டத்தை முடித்துக்கொண்டது நியூஸிலந்து முதல் இன்னிங்ஸில் 193 ரன்கள் எடுத்தது.

### 300 பேருக்கு பொது மன்னிப்பு

பாரிஸ், ஜூலை 13

4 உயர்தர பிரெஞ்சு ஜெனரல்கள் உட்பட 300 பேருக்கு பிரெஞ்சு ஜனுதிபதி டிகால் மன்னிப்பு அளித்திருக்கிறுர், இந்த ஜெனரல்கள் 1961-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் அல்ஜீரியாவில் டிகாலுக்கெதிராக இயக்கம் நடத்தியவர்கள்.

### பசுக்கள் அனுப்புமாறு லண்டனிடம் கோரிக்கை

லண்டன், ஜூலை 13

2 காளைகளையும், 14 இளம் பசுக்களையும் அனுப்பிவைக்கும்படி இலங்கை விவசாய இலாகா கேட்டுள்ளதாக லண்டனில் நடைபெற்ற விவசாய கண்காட்சியின் போது அபிர்டீன் அங்கஸ்காளைகள் சங்கம் தெரிவித்தது.

அபிர்டீன் அங்கஸ் காளைகளை இலங்கைக்கு ஏற்றுமதி செய்வது இதுதான் முதல் தடவையென்றும், காளைஸ்தலங்களுக்காகவே இக்காளைகள் அனுப்பப்படுகிறதென்றும் அச் சங்கத்தினர் மேலும் தெரிவித்தனர்.

### சூடானில் கலகம்

கார்ட்டூம், ஜூலை 13

சூடானின் தெற்கு பகுதியில் கலகம் ஏற்பட்டிருப்பதாயும், ஊரடங்கு உத்தரவு அங்கு அமுல் செய்யப்பட்டு வருவதாயும் அறிவிக்கப்படுகிறது. காங்கோ, உகண்டா ஆகிய நாடுகளுடனுள்ள எல்லையான ஜூபாவில் நடைபெற்ற கலகங்களில் பலர் மாண்டதாயும் வீடுகளும் கட்டடங்களும் எரிக்கப்பட்டதாயும் அறிவிக்கப்படுகிறது.

### பிரான்ஸின் சிறு அணுகுண்டுகள்

பாரிஸ், ஜூலை 13

புதிய சிறியரக அணுக் குண்டுகளை பிரான் தயாரித்து வருவதாக இன்று அறிவிக்கப்பட்டது.

பலநாடுகள் இப்போது அணுக்குண்டுகளை தயாரிக்கும் தகுதியில் இருப்பதாயும் இந்தியா, ஜப்பான், மேற்கு ஜெர்மனி, கனடா, இத்தாலி, சுவீடன், ஆகிய நாடுகள் அவற்றைத்தயாரிக்க முடியும் என்றும் அறிவிக்கப்பட்டது.

### ஜன சங்கம் கண்டனம்

புதுடில்லி, ஜூலை 13

ஜனசங்க தேசிய நிர்வாக கமிட்டி கட்ச் ஒப்பந்தம் பற்றிக்கண்டனம் தெரிவித்திருக்கிறது. விசாரணை மன்றம் அமைப்பது அபாயகரமான ஒரு முன் உதாரணம் என்றும் அது கூறியுள்ளது.

மொழிப் பிரச்னை பற்றி காங்கிரஸ் காரியக் கமிட்டி மேற்கொண்ட முடிவையும் அது கண்டித்திருக்கிறது.

### டொமினிக்கன் குடியரசு

சாந்தாடொமிங்கோ, ஜூலை 13

டொமினிக்கன் குடியரசின் ஜெனரல் இம்பர்ட்டின் ஆதரவாளர்கள் சிவிலியன்களை குறிப்பாக ஜெனரல் கமாநோவின் ஆதரவாளர்களைப் படுகொலை செய்ததாக அறிவிக்கப்பட்டது.

### மாணவர் கைது

லிஸ்டன், ஜூலை 13

16 வயதுப் பெண் உட்பட 31 மாணவர்கள் சதி நடவடிக்கையிலீடுபட்டதாய் போர்த்துக்கீஸ அரசாங்கம், அவர்களைக் கைது செய்திருக்கிறது.

### பிரிட்டனில் சிலி ஜனுதிபதி

லண்டன் ஜூலை 13

சிலி ஜனுதிபதி இன்று பிரிட்டனில் தனது ராஜாங்க விஜயத்தை ஆரம்பிக்கிறுர், ஒரு லத்தீன் அமெரிக்க அதிபர் பிரிட்டனுக்கு ராஜாங்க விஜயம் மேற்கொள்வது இதுவே முதற் தடவை.

### விசேஷ எவரெஸ்ட் முத்திரை

புதுடில்லி, ஜூலை 13

எவரெஸ்ட் வெற்றியைக் குறிக்குமுகமாக சுதந்திர தினமான ஆகஸ்ட் 14-ம் திகதி விசேஷ முத்திரை ஒன்று வெளியிடப்படும்.

பம்பாய், ஜூலை 13

பம்பாய் ஆஸ்பத்திரி ஒன்றில் அனுமதிக்கப்பட்டிருக்கும் பிரபல பாடகர் ஸ்ரீஓம்கார்நாத் தாகூர் இப்போது குணமடைந்து வருவதாக அறிவிக்கப்பட்டது.

## கந்தையா இல்லம் இம்முறை வென்றது

அச்சுவேலி செல்வி விளையாட்டுகளில் பங்கு கொண்டு நல்ல திடகாத்திர மாணவர்களாகிய நீங்கள் எத்தனையோ உயிர்களைக் காப்பதற்கு இரத்ததானம் செய்வது மிக வரவேற்கத்தக்க தொண்டாகும் என்று புத்தூர் சோமாஸ்கந்தக் கல்லூரி விளையாட்டுப் போட்டியின் போது பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வைத்திய நிபுணர் விசுவரத்தினம் குறிப்பிட்டார்.

விளையாட்டுப் போட்டியில் இவ்வருடம் கந்தையா இல்லம் முதலிடம் பெற்றது. இக் கல்லூரியில் விளையாட்டுப் போட்டி ஆரம்பித்த காலத்தில் இம்முறையே கந்தையா இல்லம் முதலிடத்தைப் பெற்றது. கந்தையா இல்லம் 132 புள்ளிகளையும் பொன்னம்பலம் இல்லம் 131 புள்ளிகளையும் பெற்றன.

சிறந்த சாதனையாளர் விபரம்:—

கீழ்ப்பிரிவு: ஆண்- கே சுப்பிரமணியம் 'கந்தையா இல்லம்'

பெண்- எஸ் சாந்ததேவி பொன்னம்பலம் இல்லம்

மத்திய பிரிவு: ஆண்- எஸ் தெய்வேந்திரன் மளவராயர் இல்லம்

பெண்- கே புவனேஸ்வரி கந்தையா இல்லம்

மேற்பிரிவு:- ஆண்- ஐ துரைசிங்கம் பொன்னம்பலம் இல்லம்

பெண்- அ விஜயலட்சுமி கந்தையா இல்லம்பி எஸ சரோஜினிதேவி மளவராயர்

திருமதி ரீ விசுவரத்தினம் பரிசில்களை வழங்கினார்.

---

## கூட்டுறவாளர்களின போட்டி முடிவுகள்

சாவகச்சேரி, புதன் சர்வதேசக் கூட்டுறவாளர் தினத்தையொட்டி தென்மராட்சி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினரின் ஆதரவில் நடைபெற்ற பேச்சுப் போட்டி, கட்டுரைப்போட்டி, நாடகப் போட்டி ஆகியவற்றில் பரிசு பெற்றவர்களின் விபரம் பின்வருமாறு:-

**பேச்சுப்போட்டி**

ஆண்கள் கனிஷ்டபிரிவு-
க செல்வராசா, — சிவராசா, க சுதர்மசீலன்

சிரேஷ்டபிரிவு-
வ லோகநாதன், எஸ் தங்கராசா, கே ஆறுமுகநாதன்.

**பேச்சுப் போட்டி**

பெண்கள் கனிஷ்டபிரிவு-
எஸ் நலனி ஏ பவானி, வ மங்கையர்க்கரசி,

சிரேஷ்ட பிரிவு
எஸ மனோகரி, கே செல்லக்கினி, ஐ யோகீஸ்வரி

**கீதப்போட்டி**

ஆண்கள் கனிஷ்ட பிரிவு
க புனிதராசா, சி அழகேந்திரன், வ தேவராசா

சிரேஷ்ட பிரிவு
செ தங்கராசா, பே கந்தசாமி, சி வேலாயுதபிள்ளை

**கீதப் போட்டி**

பெண்கள் கனிஷ்ட பிரிவு
ஆ இரத்தினசபாபதி, வ விமலேஸ்வரி, க சொர்ணலட்சுமி

சிரேஷ்டபிரிவு
வே பரமேஸ்வரி, சி கோகிலாதேவி, சி சவுந்தரராணி

**கட்டுரைப் போட்டி**

கனிஷ்ட பிரிவு
க பாலசுந்தரராசா, வ அருட்சோதிநாதன், சி கலாவதி

சிரேஷ்ட பிரிவு
ஏ செல்வராசா; வி அன்னமுத்து, க மயில்வாகனம்

**நாடகப்போட்டி**

சரசாலை-மட்டுவில்பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்

## வகுப்புவாத துண்டுப்பிரசுரங்கள் பஸ் நிலையங்களில் விநியோகம்

கொழும்பு, செவ்வாய் வகுப்பு துவேஷத்தை கிளப்பும் துண்டுப் பிரசுரங்கள் கொழும்பிலுள்ள முக்கிய இடங்களில் விநியோகிக்கப் பட்டு வருவதாகவும், இரகசிய பொலிஸார் இப்படியான வகுப்புவாத துண்டுப்பிரசுரங்கள் பற்றி ஆராய்ந்து வருவதாகவும் அறியப்படுகிறது.

இத்துண்டுப்பிரசுரங்கள் பஸ் நிலையங்களிலும், சந்தைகளிலும், மற்றும் பொது இடங்களிலும் ஐந்துசதத்திற்கும்பத்து சதத்திற்கும், விற்பனை செய்யப்பட்டு வருவதாகவும், இந்த இயக்கத்திற்கு சில இடதுசாரிகள் பின்னால் இருந்து ஊக்கமளித்து வருவதாகவும் தெரியவருகிறது.

தேசிய அரசாங்கத்தின் அமைதியான நிர்வாகத்தை சீர்குலைக்க சில இடதுசாரிகள் இந்த இயக்கத்திற்கு ஊக்கமளித்து வருவதாக தகவல் கிடைத்துள்ளதாக இரகசிய பொலிஸார் தெரிவித்தனர்.

சிங்களமக்களின் உரிமையை தேசிய அரசாங்கம் தமிழர்களுக்கு விற்று விட்டதாகவும், உண்மையை தேசபக்தர்கள், இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமென்றும், சில துண்டு பிரசுரங்களில் கூறப்பட்டுள்ளது.

சில துண்டுப்பிரசுரங்களில், அச்சிட்டு வெளியிட்டவர்களின் பெயர் குறிப்பிடப்படவில்லை யென்றும், வேறு சில துண்டுப் பிரசுரங்களின் தவறான பெயர்கள் கொடுக்கப்பட்டிருப்பதாகவும் அறியப்படுகிறது.

## 'தாயிலும் மேலானவர் யேசு பெருமான்'

சுன்னாகம், செவ்வாய் சுன்னாகம் அ.ச. அந்தோனியார் கோவிலில் நடைபெற்ற தேவநற்கருணைத் திருநாள் அதிவண. பிதா ஜி. கி. பாலசுந்தரம் தலைமையில் நடைபெற்றது.

சுன்னாகம் சந்தை மைதானத்தில் நடைபெற்ற சமயப் பொதுக்கூட்டத்தில் சரப்பன் கட்டளைக் குரவர் வண. பிதா பீற்றர்பிள்ளை அடிகளார் உரைநிகழ்த்துகையில் யேசுபெருமான் மனிதர்மீது காட்டும் அன்பும், கருணையும் ஒரு தாயானவள் தன் பிள்ளைகளில் காட்டும் அன்பிலும் நேசத்திலும் பார்க்கப் பன்மடங்கு அதிகமானது என்று குறிப்பிட்டார்.

ஊர்வலத்தில் பொதுவுடைமை தொண்டர்களான ரஷ்யா,

## சாஸ்திரி யூகோ பயணம்

பெல்கிரேட், ஜூலை 13 இந்தியப் பிரதமர் சாஸ்திரி வருகிற 28-ந் திகதி யூகோஸ்லேவியா சென்று விட்டு, 31-ம் திகதி இந்தியா புறப்படுவார் என அறிவிக்கப்பட்டது.

---

சீனா, செக்கோஸ்லவேக்கியா மற்றும் ஜனநாயக நாடுகள் உட்பட 28 நாடுகளின் தேசியக்கொடிகளைத் தாங்கிய வண்ணம் அச்சுவேலி திருக்குடும்பக் கன்னியர் கல்லூரி சாரண மாணவிகள் அணி வகுத்துச் சென்றனர்.

ஊர்வலம் காங்கேசன்துறை-கந்தரோடை வீதி வழியாகத் தேவாலய மைதானத்தை வந்தடைந்தது. இவ்வைபவத்தில் பல மதத்தைச் சார்ந்த மக்களும் பக்திபரவசத்துடன் பங்குபற்றினர்.



# விளம்பரம்

## பிரிவிடுகல நொத்தீஸ்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோர்ட்டில்

கரவெட்டி வடக்கு

1. சின்னத்தம்பி தங்கராசா.
2. பெண் இராசமணி.

கரவெட்டி மேற்கு

3. சின்னத்தம்பி சிற்றம்பலம்
4. பெண் தில்லைநாயகதேவி.

கரவெட்டி வடக்கு

5. குமாரசூரியர் நடேசு.
6. பெண் செல்லாச்சிப்பிள்ளை.

வழக்காளிகள்

VS

இல. 8580

கரவெட்டி வடக்கு

1. கந்தையா தங்கராசா.
2. பெண் ஜெயமணி.
3. இளையதம்பி மாணிக்கம்.
4. பெண் செல்லமுத்து.

கரணவாய் வடக்கு

5. ஏரம்பு சுப்பிரமணியம். மன்னூர்
6. செல்வச்சோதி மருமகம் இசல்லையா செல்வத்தீபம்.

கரவெட்டி மேற்கு

7. பெண் திரவியம்.

கரவெட்டி வடக்கு

8. செல்லையா மறுநாமம் செல்வச்சோதி லகம்பெண் பொன்னம்மா.

கரவெட்டி மேற்கு

9. செல்வத்தீபம் செல்வம்
10. பிரியதரிசினி மறுநாமம் திருச்செல்வி
11. வயிரமுத்து கந்தவனம்

9-ம், 10-ம் எதிரிகள் பராயக் குறைவாயிருப்பதால் அவர்களின் பராபரிப்புக் தத்துவகாரன் 11-ம் எதிரி மூலமாக—

எதிரிகள்;

கரவெட்டி குறுணிக்லறிச்சி இறை காகம்புலம் வறுக்கலைத் தோட்டமும் கட்டையிலு வையடியும் நிலப்பரப்பு 26 லசி 5. என்னும் ஆதனத்தை 1951-ம் ஆண்டின் 16-ம் இலக்கப் பிரிவிடுதல் கட்டளைச் சட்டத்திற்கமைய மேற்படி கோட்டில் மேற்படி இலக்கத்தில் ஓர் பிரிவிடுதல்வழக்கு தொடர்ந்திருக்கின்றதென்று இத்தால் மக்களறிவிக்கப்பட்டிருக்கின்றது.

மேற்படி வழக்கில் எதிரிகள் மேற்படி கோர்ட்டில் 1965-ம் ஆடி மீ 28-ந் திகதி சமுகமளிக்கும்படி கட்டளை பண்ணப்பட்டிருக்கிறார்கள்.

கோட்டாரின் கட்டளைப்படி.

மு. ஸ்ரீபத்மநாதன்,
கோ. முகிலிதர்.

1965-ம் ஆடி மீ 10.

460

---

கைதடி

# செவிடர், குருடர் பாடசாலை விளையாட்டுப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், புதன்

கைதடி செவிடர், குருடர் பாடசாலை இல்லங்களுக்கிடையேயான வருடாந்த விளையாட்டுப்போட்டி சென்ற வெள்ளிக்கிழமை நடைபெற்றது. பச்சை இல்லம் 198, சிவப்பு இல்லம் 175, மஞ்சள் இல்லம் 145. புள்ளிகளைப் பெற்று பச்சை இல்லம் முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது.

போட்டிகளில் பங்கு பற்றி வெற்றி பெற்றோர் விவரம்:

செவிப்புலனுணர்வற்றோர் ஆண்கள் 100 யார் ஓட்டம் கீழ்ப்பிரிவு: இஸ்மைல், உத்துமாலெவ்வை, தம்பிராசா. மத்தியபிரிவு: புகாரி, பரமனந்தன், குகநாதன். மேற்பிரிவு: வரதராசா, இராசேந்திரன், முருகேசன்.

200 யார் ஓட்டம் கீழ்ப்பிரிவு: இஸ்மை, அலெக்சாண்டர், இரத்தினராஜா. மத்திய பிரிவு கரீம், கெளஸ், கந்தசாமி. மேற்பிரிவு: இராசேந்திரன், வரதராசா, பெரியதம்பி

400 யார் ஓட்டம் அதிமேற்பிரிவு: இளங்கோவன், மகேஸ்வரன், துரைசிங்கம்.

தடைஓட்டம் பெரியதம்பி, மகேஸ்வரன், இரத்தினராசா.

சாக்கோட்டம் வைத்தீஸ்வரம், தம்பிராசா, செந்தில்நாதன்.

4 X 100 யார் அஞ்சலோட்டம் பச்சை இல்லம், சிவப்பு இல்லம், மஞ்சள் இல்லம்.

கயிறு இழுத்தல் மஞ்சள் இல்லம், சிவப்பு இல்லம், பச்சை இல்லம்.

உயரம் பாய்தல் கீழ்ப்பிரிவு: இரத்தினராசா, வைத்தீஸ்வரன், செந்தில்நாதன். மத்தியபிரிவு: புகாரி, கெளஸ், சிவலிங்கம், மேற்பிரிவு: பத்மநாதன், முருகேசன்.

பரிதிவட்டம் எறிதல் கீழ்ப்பிரிவு: துரைசா, தம்பிராசா மத்தியபிரிவு: சிவலிங்கம் மேற்பிரிவு: பெரியதம்பி, பத்மநாதன், இராசேந்திரன். அதிமேற்பிரிவு: மகேஸ்வரன், இளங்கோவன், துரைசிங்கம்

குண்டெறிதல் மத்தியபிரிவு: பரமநாதன், சீன், குகநாதன் மேற்பிரிவு: சிவபாதம், பெரியதம்பி, இராசேந்திரன்.

பாலர் ஓட்டம் 25 யார் ஜெமோகன், இரஞ்சன், இராமகிருஷ்ணன்,

நீளம்பாய்தல் கீழ்ப்பிரிவு: செந்தில்நாதன், வைத்தீஸ்வரன், மத்தியபிரிவு: புகாரி பரமானந்தன், சிவசிங்கம் மேற்பிரிவு: இராசேந்திரன், வரதராசா, சிவபாதம் அதிமேற்பிரிவு: இளங்கோவன் துரைசிங்கம், மகேஸ்வரன்.

பெண்கள்: 100 யார் ஓட்டம் கீழ்ப்பிரிவு: பிலோமினா, அமிர்தவதி. இரஞ்சிதமணி.

மத்திய பிரிவு சிவலோகநாயகி, பக்தகௌரி, இராசேஸ்வரி.

மேற்பிரிவு ஜெயசிந்தா, லீலாவதி. மீனாட்சி.

4×100 யார் அஞ்சலோட்டம் பச்சை இல்லம், சிவப்பு இல்லம், மஞ்சள் இல்லம்.

சமநிலை ஓட்டம் கீழ்ப்பிரிவு அமிர்தவதி, புஸ்பராணி, மேரி மாக்ரேட்.

மத்தியபிரிவு சித்திராங்கனி, மங்கையர்க்கரசி, மார்லியா

சாக்கோட்டம் கீழ்ப்பிரிவு புஸ்பராணி, பிலோமினா, மேரி மக்கிறேட்.

மத்திய பிரிவு பராசக்தி, பத்தகௌரி, மங்கையர்க்கரசி.

மேற்பிரிவு மீனாட்சி, லீலாவதி, ஜெயசிந்தா,

நீளம் பாய்தல் கீழ்ப்பிரிவு அமிர்தவதி, புஸ்பராணி, பிலோமினா.

மத்தியபிரிவு பத்தகௌரி, சத்தியபாமா, சிவலோகநாயகி

மேற்பிரிவு ஜெயசிந்தா, லீலாவதி, மீனாட்சி.

தடை ஓட்டம் ஜெயசிந்தா, லீலாவதி, மீனாட்சி.

பந்தெறிதல் கீழ்ப்பிரிவு இரஞ்சிதமணி, பரமேஸ்வரி, ரோகிணி.

மத்தியபிரிவு மங்கையர்கரசி, சித்திராங்கனி மார்லியா,

கட்புலனிழந்தோர் பிரிவு—

சமநிலை ஓட்டம் மங்களராணி, இலட்சுமி, வெள்ளையம்மா,

தேசிக்காய் ஓட்டம் சிவகுருநாதன், மெய்யப்பன், விசயராசசிங்கம்,

தடை ஓட்டம் மெய்யப்பன், இலட்சுமி, விசயராசசிங்கம்.

பந்தெறிதல் விசயராசசிங்கம், மெய்யப்பன், நடராசா,

50 யார் ஓட்டம் மெய்யப்பன், நடராசா, விசயராசசிங்கம்.

50 யார் ஓட்டம் இலட்சுமி, வெள்ளையம்மா, மங்களராணி.

---

## கேள்விப் பத்திரம்

### சிறுப்பிட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்

கீழ்க்காணும் கேள்விப்பத்திரங்களை கோருகின்றது:—

1. டிசங்கத்திலிருந்து சுன்னாகம் புகையிரத நிலயத்திற்கு கூடார லொறியில் வெங்காயம் ஏற்றிச் செல்லுதற்கான குறைந்த (சம்பள விகிதக்) கேள்விப்பத்தரம். பிணைப்பணம் ரூபா 250-00

2. டிசங்கத்தில் வெங்காயம் கூட்டிவிட்டு சாக்கிற் போட்டுத் தைத்து லொறியில் ஏற்றி புகையிரதப் பெட்டியிற் பறித்தற்கான குறைந்த கேள்விப் பத்திரம் (ஓர் அந்தருக்கு எவ்வளவு கூலி எனக் குறிப்பிடுக) பிணைப் பணம் ரூபா 250-00

இவற்றுக்குரிய விண்ணப்பங்கள் 25-7-1965 நண்பகல் 12 மணிவரையும் ஏற்றுக்கொள்ளப்படும்.

பூ. சிவசுப்பிரமணியம்
கௌரவ காரியதரிசி,
சிறுப்பிட்டி ப. நோ. சங்கம்

சிறுப்பிட்டி,
18-7-65

461

---

## தென்புலோலியூர் புலவர் திலகன் கந்தமுருகேசனாது ஐசுறவு குறித்து ஞாபகதின விழா

மேற்படி விழா நிகழும் விசுவாவசு ஆண்டு ஆடித் திங்கள் உக் நாள் (17-7-65) சனிக்கிழமை மாலை ஆறு மணி தொடக்கம் புலோலி புற்றளை வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும்.

இதையே அறிவித்தலாகக் கொண்டு அன்னாரது மாணவர், நண்பர், அனுதாபிகள் அனைவரையும் தவறாது இவ்விழாவிற் கலந்துகொள்ளுமாறு பணிவுடன் வேண்டுகின்றோம்.

தென்புலோலியூர்,
பருத்தித்துறை.

விழாக்குழு.

402

---

# வரி விளம்பரம்

### தேவை

ரயர் றிப்பெயர் வேலையில் நன்கு அநுபவமுள்ள ஒருவர் உடனடியாகத் தேவை விபரங்களுக்கு: கோர்தேன் இண்டஸ்ட்றீஸ், 8/1 ஸ்ரான்லிறோட். யாழ்ப்பாணம் 648

### WANTED

Bulldozer Drivers required for tronsporting earth in Colombo for work on a Contract basis Applicants should be licensed to drive lorries and land vehicles and should be in a position to give a cash security of Rs 500/- Apply C/o Jafferjee Brothers 150 St Joseph's Street, Grandpass 635

Tractor Drivers required for agricultural tractors for transporting earth in Colombo for work on a contract basis Applicants should be licensed to drive lorries and land vehicles and should be in a position to give a cash security of Rs 350 -. Apply C o Jafferjee Brothers 150 St Joshph s Street, Grandpass 636

Mechanics for Bulldozers loaders and Tractors required for work in Colombo Long experience with bigCompanies essential Cash security of Rs 500/- required Apply C/o Jafferjee Brothers 150 St Joseph's Street, Grandpass. 637

வியாபாரிகள் வருமான வரிக் கணக்கு எழுதிக் கொடுக்கப்படும். எழுதுங்கள். எம். ஏ. எம். சகிப, பட்டாணிச்சியூர், வவுனியா 646

### விற்பனைக்கு

குறைந்த பாவிப்பிலுள்ள 25 சிறீ 1678 டேவிட் பிறௌன் டிராக்டர் கலப்பையுடன் யாழ்ப்பாணம் காங்கேசன் துறை வீதி, 682-ல் (பூவரசமரத்தடி) பார்வையிடலாம். 634

மிகவும் நல்ல நிலைமையில் உள்ள CB தொடரவரிசை மொறிஸ் 8 விற்பனைக்குண்டு. 25, செட்டிமணி றோட், நல்லூர்.

### கல்வி

இந்த மாதத்தில் ஜி. சி. ஈ, (சாதாரணம்) வர்த்தக வகுப்புகளில் சேரும் 15 மாணவர்களுக்கு இலவசக்கல்வி அளிக்கப்படும். யுனைட்டெட் இன்ஸ்ரியூற்ஸ், கெல்லியடி, கரவெட்டி. /107, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். 601

### வைத்தியம்

சனரோகம், தொய்வு, வாதம், கிரந்தி, தீட்டு இறைத்தல், புத்திரப்பேறு, தகுந்த முறையில் வைத்தியம் செய்பவர். பொ. செல்லையா, வைத்தியர், கந்தர்மடம் யாழ்ப்பாணம். 586

---

## கல்லூரியில் மணிவாசகர் விழா

யாழ்ப்பாணம், புதன்

ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் சென்ற வார இறுதியில் மணிவாசகர் குருபூசைகொண்டாடப்பட்டது. வித்துவான் சி. ஆறுமுகம் தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் வைத்தீஸ்வர வித்தியாலய தமிழ் விரிவுரையாளர் வித்துவான் பொன் கனகசபை 'திருவாசகம் என்னும் தேன்' என்னும் பொருள் பற்றி உரை நிகழ்த்தினார்;

❦ ❦ ❦

பருத்தித்துறை, செல் கரணவாய் தெற்கு அரசினர் மகா வித்தியாலயத்தில் கல்லூரி அதிபர் திரு. சி. தர்மலிங்கம் தலைமையில் மணிவாசகர் விழா பக்தி சிரத்தையுடன் கொண்டாடப்பட்டது.

வித்துவான் திரு. க. கார்த்திகேசன் அவர்கள் பிரதம பேச்சாளராகக் கலந்துகொண்டுரையாற்றினார்.

இவ்விழாவையொட்டி மாணவர் தேவார திருவாசகங்களை ஓதியதுடன் மணிவாசகர் பற்றிய சொற் பொழிவுகளையும் நிகழ்த்தினர்.

## கூட்டுறவு தின விழாவில் வாகன ஊர்வலங்கள்

சாவகச்சேரி, செவ்.

இம்மாதம் 16-ம் திகதி வெள்ளிக்கிழமை மாலிப்பாப பில் ஆரம்பமாகும் சர்வதேசக்கூட்டுறவாளர் தின விழாவில் கலந்துகொள்ளும் பொருட்டு ட்ராக்டர், லொறி, சைக்கிள் ஊர்வலங்களை நடாத்துவதற்கான ஏற்பாடுகளை வடபகுதியிலுள்ள எல்லா பல நோக்குக்கூட்டுறவுச் சங்கச் சமாஜங்களும் செய்துவருகின்றன.

## விளையாட்டுப் போட்டி

யாழ்ப்பாணம், புதன்

கோப்பாய் வடமராட்சித் தமிழ்ப் பாடசாலையின் வருடாந்த விளையாட்டுப்போட்டி. வட்டார வித்தியாதரிசி திரு என். ஆர் பாலசிங்கம் தலைமையில் புதன் வியாழக்கிழமைகளில் நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரியில் நடைபெறவிருக்கிறது. வட்டார வித்தியாதரிசியும், அரசினர் பாடநூல்சபை ஆலோசகருமான திரு ஏ அருளையா பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். திருமதி லீலாவதி அருளையா பரிசில்கள் வழங்குவார்

## தொழில்நுட்பபாடசாலையை கல்விமந்திரி பார்வையிடுவார்

சாவகச்சேரி, செவ்வாய்

யாழ்ப்பாணம் வரும் கல்விமந்திரி திரு. ஐ எம். ஆர். ஏ. இரியகொல்ல நல்லூர் தொகுதியின் அலுவலகங்களை கவனித்துவரும் கோப்பாய் எம். பி, திரு சி. கதிரவேற்பிள்ளையின் அழைப்புக்கிணங்க யாம் கனிஷ்ட தொழில் நுட்பப்பாடசாலைக்கு இம் மாதம் 24-ந்திகதி விஜயம் செய்து பார்வையிடுவார். அந்த சமயம் வடபகுதி எம்.பிக்கள் அனைவரும் அங்கு பிரசன்னமாயிருப்பார்கள். இந்தக் கனிஷ்ட தொழில் நுட்பபாடசாலையை சிரேஷ்ட தொழில் நுட்ப பாடசாலையாக தரம் உயர்த்தி எல்லாவித தொழில் நுட்ப பாடங்களும் போதிப்பதற்கேற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அவர்கள் மந்திரியை வற்புறுத்துவார்களென்றும் தெரிகிறது.

---

மூட்டைப்பூச்சிகளை அழிப்பதற்கு
புதிய ஜெர்மன் மருந்து
பெயரெக்ஸ்
BAYTEX
Agents :
PHONE : 397 ROYAL DISPENSARY JAFFNA

## யாழ்ப்பாணம் வரும் தூதரக அதிகாரி

குருட்டசிட்டி, செவ

பிரிட்டிஷ் தூதராலய தகவல் இலாகா டைரக்டர் திரு. பென் பிரவுண் அடுத்த மாத முற்பகுதியில் யாழ்ப்பாணம் விஜயம் செய்யவிருக்கின்றார். யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சமாஜத்தினரின் விருந்தினராக யாழ் நகரில் மூன்று நாட்கள் தங்கி இருந்து யாழ்ப்பாணப் பகுதியில் நல்ல முறையில் இயங்கும் சில சனசமூக நிலையங்களுக்கு நேரில் சென்று அவற்றின் வேலைத் திட்டங்களை அறிந்து கொள்வார்.

## நாடகமன்றத்தின் வருடாந்தக் கூட்டம்

யாழ்ப்பாணம், புதன்

யாழ். நாடகக் கலாமன்றத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் மன்றத்தலைவர் திரு கே. வி. ஐயாத்துரை தலைமையில் நடைபெற்றது. தலைவர் தமது முன்னுரையில் "சாதி சமய வேறுபாடுகளுக்கு இடங்கொடாது செயலாற்றும் இம்மன்றம் என்றும் சமூகத்திற்குச் சேவை செய்ய வேண்டும்" எனக் குறிப்பிட்டார்.

கூட்டத்தில் வேறு பலரும் உரை நிகழ்த்தினர். புதிய உத்தியோகத்தர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

**REGAL - JAFFNA**
**NOW SHOWING**
GEORGE MONTCOMERY
IN
Man From Gods Country
(Cinemascope - Color)
Also:- Americans in Space

## சிங்களம் போதிக்க தமிழ் ஆசிரியை

பருத்தித்துறை, செவ

காலியிலுள்ள பாடசாலை ஒன்றில் சிங்களத்தில் விஞ்ஞானம் போதிப்பதற்காக, நெல்லியடி மெதடிஸ்த பாடசாலையில் கடமையாற்றிய மணவை ஆசிரியை செல்வி சகுந்தலை தாமோதரம் இடமாற்றம் பெற்றுச் செல்கின்றார்.

இடமாற்றம் பெற்றுச் செல்வதை முன்னிட்டு நெல்லியடி மெதடிஸ்த பாடசாலை ஆசிரியர்களும், மாணவர்களும் அவருக்கு ஓர் பிரிவுபசாரமளித்தனர்.

தலைமை ஆசிரியர் திரு யே. கே. செல்லத்துரை தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் ஆசிரியர்கள் யே. எஸ். செல்லப்பா, சி. மயில்வாகனம் ஆகியோர் அவரின் சேவை நலனைப் பாராட்டிப் பேசினர்.

## சுடுகாட்டில் பிரேதம்

ஊர்காவற்றுறை, புதன்

வேலணை மேற்கு கிராம சேவகர் பிரிவிலுள்ள கருவில் சுடுகாட்டுக்கு சமீபமாக உள்ள மரம் ஒன்றில் கழுத்தில் சுருக்கிட்ட நிலையில் ஆண் பிரேதம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அஸ்தி கரைப்பு வைபவத்திற்காகச் சுடுகாட்டுக்குச் சென்ற ஒரு கோஷ்டியினர் துர்நாற்றம் வீசியதைக் கொண்டு இந்தப் பிரேதத்தைக் கண்டுபிடித்தனரெனத் தெரிகிறது.

ஊர்காவற்றுறைப் பொலிசாருக்கு இதுபற்றி தெரிவிக்கப்பட்டு விசாரணை நடைபெறுகிறது.

மகத்தான 3வது வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) | பிளாஸா (வெள்ளவத்தை) | மொடேர்ன் (பதுளை)

விஜயா (மட்டக்களப்பு) | வெலிங்டன் (யாழ்ப்பாணம்) | விஜிதா (ஹட்டன்)

என். டி. ராமராவ், அஞ்சலிதேவி,
ஜெமினி கணேசன். எம். ஆர். ராதா,
மாஸ்டர் முரளி, பேபி உமா, நாகையா
மற்றும் பலர் நடித்த




# லவகுசா

(முழுநீள கலர்ப்படம்)

உலகம் போற்றி புகழும் இராமாயண காவியத்தின் சித்திரமாம் ஒரு பொன்னேடு—லவகுசா—
படித்தவர்கள் பலகோடி! கேட்டவர்கள் பலகோடி!
இதோ சினிமாஸ்திரைகளில் பார்த்து மகிழுங்கள்!

## இலங்கரத்னவுக்கு 'பென்ஸ்' டிக்கட்

பம்பலப்பிட்டி, செவ்வாய்

'பென்ஸ்' கார் சுவீப் டிக்கட்டுகள் முன்னாள் வர்த்தக மந்திரி திரு. ரீ. பீ. இலங்கரத்னவிற்கு நாட்டின் பல பகுதிகளிலிருந்தும், அவர்களது நண்பர்களாலும், ஆதரவாளர்களாலும் அனுப்பப்பட்டு வருவதாக அறியப்படுகிறது.

தற்பொழுது பரிசு பார்க்கப்படும் பென்ஸ் கார் கூட்டு அரசாங்கம் பதவியிலிருந்த போது, திரு இலங்கரத்னவின் உத்தியோகபூர்வ விஜயங்களுக்காக வாங்கப்பட்டது.

இதுவரை ஆயிரத்திற்கு மேற்பட்ட பென்ஸ் கார் சுவீப் டிக்கட்டுகள் திரு இலங்கரத்னவிற்கு கிடைத்துள்ளதாகவும் நாற்றுக்கணக்கானோர் பென்ஸ் கார் தங்களுக்கு கிடைத்தால், அதை திரு இலங்கரத்னவிற்கு அன்பளிப்பாக தனிப்பட்ட கடிதம் மூலம் தெரிவித்துள்ளதாகவும் அறியப்படுகிறது.

## மணிவாசகர் விழா

கொழும்பு, செவ்

பொதுவேலைத் தரணைக்கள இந்து சங்கத்தினுதரவில் அண்மையில் மாணிக்கவாசகர் விழா திணைக்களப் பதில்பிரதிகணக்காளர் திரு. கா. பொ. நடராசா தலைமையில் நடைபெற்றது. நவாலியூர் திரு. சோமசுந்தரம் சிறப்புச்சொற்பொழிவாளராகக் கலந்துகொண்டு உரைநிகழ்த்துகையில், "மாணிக்கவாசகர் முதலமைச்சர் என்ற பெரிய பதவியை வகித்து எல்லா வளங்களுடனும் வாழ்ந்திருந்தும் அந்த வாழ்க்கையைப் பெரிதாக எண்ணாது தெய்வீக வாழ்க்கையில் பேரானந்தப்பெருவாழ்வு ஒன்றுவதொன்றே மேலானது என்ற குறிக்கோளுடன், துறவு பூண்டார். பற்றிலாநிலை அரசனையும் ஆண்டியையும் சமமாக மதித்தார். அதனால் பேரின்பம் பெற்றார். அத்தகைய வாழ்வினைப் பெறநாமும் முயல வேண்டும். உலோகாயதவாதிகளின் உட்லோப்பும் வாழ்க்கை உள்ளத்தை ஓம்பி உயர்வடையச் செய்யமாட்டாது" என்று குறிப்பிட்டார்.

சாவகச்சேரி, புதன்

வடபகுதிக்கு உத்தியோகபூர்வமாக விஜயம் செய்யும் காணி நீர்ப்பாசன, மின்சார மந்திரி திரு சி.பி டி. சில்வாவிற்கு இம்மாதம் 18-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை வலியா புதுக்குடியிருப்பு கிராம முன்னேற்றச் சங்க மண்டபத்தில் ஒரு பொது வரவேற்பு அளிக்க ஏற்பாடாகியிருக்கிறது.

## மந்திரி பார்வையிடுவார்

சாவகச்சேரி, செவ்.

இந்த வார இறுதியில் யாழ்ப்பாணத்திற்கு உத்தியோகபூர்வமாக விஜயம்செய்யும் காணி, நீர்ப்பாசன, மின்சார மந்திரி திரு சி. பி. டி. சில்வா 17-ந் திகதி சனிக்கிழமை காலை புத்தூர் கலாவரைக் கிணற்றையும், வடமராட்சி கடல் திட்டத்தையும், பருத்தித்துறை, வல்லிபுரம் கொட்டை முந்திரிகைச் செய்கையையும் பார்வையிடுவார்.

## மாட்டுச் சவாரிப் போட்டி

ஊர்காவற்றுறை, செவ்.

சரவணை கிராமமுன்னேற்றச் சங்கத்தினரால் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை சரவணை முச்சந்திக்கருகாமையில் அமைந்துள்ள காவலர் விளையாட்டு மைதானத்தில் மாட்டுச் சவாரிப் போட்டி நடத்தப்படவிருக்கிறது.

# படுத்திருக்கும்போது கோடரியால் வெட்டப் பட்டனராம்

## ஒருவர் ஆஸ்பத்திரியில் காலமானார்

முல்லைத்தீவு, செவ்வாய்

முல்லைத்தீவைச் சேர்ந்த வெள்ளா முள்ளிவாய்க்கால் வாசிகளான கந்தையா செல்லத்துரை வயது 22, கந்தையா ஐயாத்துரை வயது 14 ஆகிய இரு சகோதரர்களும் சென்ற 9ந்திகதி அதிகாலை 3 மணியளவில் வீட்டு விறாந்தையில் படுத்திருக்கும்போது இனந்தெரியாத ஒருவரால் கோடரியால் வெட்டப்பட்டனர் எனக் கூறப்படுகிறது. இவர்களை முள்ளிவாய்க்கால் கிராமசேவகர் திரு எஸ். வேலாயுதம் முல்லைத்தீவு ஆஸ்பத்திரிக்குக் கொண்டு சென்றார். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட சில மணி நேரத்தில் கந்தையா ஐயாத்துரை காலமானார். கந்தையா செல்லத்துரையை யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர்.

மேற்படி கந்தையா ஐயாத்துரையின் மரணம்பற்றி முல்லைத்தீவு மாஜிஸ்திரேட் திரு டி. எஸ். எம். செனிவரத்தின விசாரணை செய்து சம்பவம் நடந்த இடத்தையும் பார்வையிட்டார்.

விசாரணையின்போது காலஞ்சென்றவரின் தாயாரான கந்தையா பெண் வள்ளிப்பிள்ளை சாட்சியமளிக்கையில் 'தான் சம்பவம் நடந்த இரவு வீட்டிற்குள் படுத்திருந்ததாகவும், தனது இரு பிள்ளைகளான காலஞ்சென்ற ஐயாத்துரை, ஆஸ்பத்திரியில் காயத்துடன் இருக்கும் செல்லத்துரை ஆகியோர் விறாந்தையில் படுத்திருந்ததாகவும், அதிகாலை 3 மணியளவில் நாய்கள் குரைக்கும் சத்தம் கேட்டுக் கதவைத் திறந்து வெளியே விளக்குடன் வந்து பார்த்தபோது சந்தேக நபராகக் கைது செய்யப்பட்டிருப்பவர் கையில் கோடரியுடன் ஓடியதைக் கண்டு கூறியதாகவும் பின்னர் தனது பிள்ளைகள் ஆபத்தான நிலையில் காயங்களுடன் இருக்கக் கண்டதாகவும் கூறினார்.

முல்லைத்தீவு பொலிஸ் பதில் பொறுப்பதிகாரி சார்ஜண்ட் திரு. ஏ. இ. டி. அல்விஸ் சந்தேக நபரான 'வெலிக்குபண்டாரகே பிரான்சிஸ் அல்லது பியதாசா அல்லது சுலேகுமார் என்பவரை மாஜிஸ்திரேட் முன்னிலையில் ஆஜர் செய்தார். சந்தேக நபரை காட்டில் கோடரியுடன் சார்ஜண்ட் அல்விஸினால் கைது செய்ததாகக் கூறப்பட்டது.

சந்தேக நபரை 18-7-65 வரை விளக்கமறியலில் வைக்கும்படி மாஜிஸ்திரேட் உத்தரவிட்டு மேல்விசாரணையை 18ந் திகதிக்கு ஒத்திவைத்தார். முல்லைத்தீவு வைத்திய அதிகாரி டாக்டர் ரி ஞானசுந்தரம் பரிசோதனை நடத்தினார்.

## காணி அமைச்சர் உடுப்பிட்டி செல்வார்

பருத்தித்துறை, செவ்

காணி அபிவிருத்தி அமைச்சர் திரு சி.பி.டி. சில்வா இம்மாதம் 17-ம் திகதியன்று உடுப்பிட்டித் தொகுதிக்கு விஜயம் செய்வார் எனத் தெரியவருகிறது.

இப்பகுதியில் அந்தகுத் தண்ணீர்த் திட்டத்துக்கான பகுதியைப்பார்வை இடுவதுடன் வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தை அடுத்து சண்டித் தொழிற்சாலைக்கு வாய்ப்பான தென்னைக்கருதப்படும் மணற் பிரதேசங்களையும் பார்வையிடுவார்.

சாவகச்சேரி, செவ்.

சாவகச்சேரிப் பகுதியில் "டிங்கி" ஜுரம் வெகுவேகமாக பரவிவருகின்றது. சிறுவர் முதல் பெரியோர்வரை அநேகமானோர் இந்த ஜுரத்தினால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

## இன்று

அகில இலங்கை சங்கீத வித்வத்சபை ஆதரவில் நல்லூர் கந்தசாமி கோவில் வடக்கு ரதவீதியில் நடைபெறும் இசை விழா நிகழ்ச்சி இன்று மாலை 5-45-க்கு ஆரம்பமாகும் பாட்டு, வயலின், புல்லாங்குழல், வாத்தியக் கோஷ்டி ஆகிய அம்சங்கள் இடம்பெறுகின்றன.

மாலை 7 மணிக்குச் சரவணை நாச்சிமார் கோவிலில் திரு. சி. நடராசாவால் இன்னிசைக் கச்சேரி நடாத்தப்படும்.

## மந்திரியைச் சந்திப்பார்

கொழும்பு, செவ்வாய்

தனியார் பாடசாலை முகாமையாளர்கள் தங்களது பிரச்சினைகள் குறித்து கல்விமந்திரியை இம்மாதம் 20ந் தேதி பேட்டிகாணவிருக்கின்றனர். தற்போதைய கல்வித் திட்டங்கள் எவ்வாறு தங்கள் பாடசாலைகளைப் பாதிக்கிறதென்பது பற்றியும் ஆராயப்படும்.

## புத்தகங்கள் உங்களுடையதா?

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் பெரியகடையில், ராஜ்கோபால் வர்த்தக நிலையத்துக்கு முன்பாக நேற்று கண்டெடுக்கப்பட்ட சில பாடசாலைப் புத்தகங்கள் 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. உரியவர் அத்தாட்சியுடன் பெற்றுக் கொள்ளலாம்.

## கீழே விழும் கடிதங்கள்

சுழிபுரம், சனி

வழக்கம்பரை அம்மன்கோவிலுக்கு முன்றலிலுள்ள வியாபார ஸ்தலத்துக்கு அருகாமையிலுள்ள தபால்பெட்டியில் கடிதம்போட்டால் உடனே பெட்டிக்கு வெளியே வந்து விழுகின்றது. இந்த விந்தையான செயலை அப்பெட்டியில் கடிதம்போடுபவர்கள் மட்டுமே அனுபவிக்கின்றனர். பெட்டியின் கீழ்ப்பக்கத்தில் பெரிய வெளியிருக்கிறது. அதனூடாகவே பெட்டியில் போடும் கடிதங்கள் வெளியே வருகின்றன.

## நியமனம்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணப் பிரதேசவிதியைச் சேர்ந்த திரு ஏ. பி. பிறின்ஸ் எதிர்மனசிங்கா குருநகர் உடையாராக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் முன்னர் குருநகர் விதானையாகவிருந்து ஓய்வு பெற்றவர்.

## ஷேக் அப்துல்லா

டெல்லி, ஜூலை 13

உதகமண்டலத்தில் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ள ஷேக் அப்துல்லா இங்கிருந்து கொடைக்கானலுக்கு கொண்டு செல்லப்படுவாரென்று இன்று அறிவிக்கப்பட்டது.

## மந்திரிக்கு விருந்து

சாவகச்சேரி, புதன்

இந்த வார இறுதியில் யாழ்ப்பாணத்திற்கு உத்தியோகபூர்வமாக விஜயம்செய்யும் தபால்தந்தி மந்திரி திரு மு. திருச்செல்வத்திற்கு வடமராட்சி தமிழ் ஆசிரியர் சங்கம் 16-ந் திகதி வெள்ளிக்கிழமை தேநீர் விருந்தளிக்கும்.

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு ஜூலை மாதம் 14-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.